1990 மே 9]

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 248 (1)ஆவது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

(1) திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்.
(2) திரு. பெ. வெங்கடாசலம்.
(3) திரு. ஆர். வரதராஜன்.
(4) திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி.
(5) திரு. எல். மூக்கையா.
(6) திரு. என். பெரியசாமி.
(7) திரு. பொ. நடராசன்.
(8) டாக்டர் எஸ். சுந்தரராஜ்.
(9) திரு. கே. ரவி அருணன்.
(10) திரு. வி. தம்புசாமி.
(11) திரு. கே. ஏ. மணி.
(12) திரு. ஆஸ்கார் சி. நிக்லி.

பேரவையின்249 (1)ஆவது விதியின்கீழ் திரு. கே. ரவி அருணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) தமிழகத்திலே விடுதலைப் புலிகள் நடமாட்டம் பற்றிய செய்தி குறித்து முதலமைச்சர் தெரிவித்த கருத்து

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். நேற்றைய தினம் நமது அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்ற போது ஒரு கருத்தை மிகவும் ஆணித்தரமாக இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்திலே இல்லை என்று. . . . . . .

10-45 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இதிலே Point of order, Point of clarification எல்லாம் வராது. I am very sorry. வேறொரு சந்தர்ப்பத்திலே பேசலாம். (குறுக்கீடு) வராது. அதெல்லாம் Zero hour-லே முன் அனுமதி பெற்று வந்திருக்க வேண்டும்.